வருகிறோம். எந்தெந்த இடங்களுக்கு எவ்வளவு எவ்வளவு தேவை என்பது நியாய விலைக் கடைகள் அமைக்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மக்களுக்கு மிக எளிதாக சர்க்கரை கிடைப்பதற்குரிய வசதிகளும் செய்யப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி இருக்கின்ற நிலைகளை ஆராய்ந்து நியாய விலைக் கடைகளை ஏற்படுத்துவதற்கு இயலுமா என்பது பற்றி ஆராயலாம் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கடைகளை ஆங்காங்கே வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம்.

முத்தரையர் வகுப்பு.

*வினா எண் 24—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்துராஜா, முத்திரியர், அம்பலக்காரர், வலையர், முதலான பல்வேறு வழங்கு பெயர்களில் உள்ளவர்களை ''முத்தரையர்'' என ஒரே இனமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசிடம் விடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) முத்துராஜா, முத்திரியர், அம்பலக்காரர், வலையர் முதலான பல்வேறு வகுப்பு பெயர்களில் உள்ளவர்களை ''முத்தரையர்'' என ஒரே இனமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசிடம் விடப்பட்டது.

(ஆ) மேற்கண்ட கோரிக்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, இந்த முத்தரையர் இனத்தைப் பற்றி இன்னும் சொல்லப் போனால், 18 பிரிவுகளில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த சமுதாயத்தினரை ஒரே பிரிவினராக ஆக்க வேண்டும் என்ற நோக்கம் அரசிடம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்தப் பிரிவினர் குறிப்பாக ஷெட்யூல்ட் வகுப்பினரைப் போன்று மோசமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஒரே வகுப்பினராக ஆக்க அரசு மறுபரிசிலனை ஏதாவது செய்ய உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: : பேரவைத் தலைவர் அவர்களே பல்வேறு பெயர்களை குறிப்பிட்டு, அவர்களை எல்லாம் ஒரே வகுப்பினராகக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதிலே விரிவாக சொல்ல வேண்

1981 ஜனவரி 24]

டும் என்று சொன்னால், மொத்தத்தில் 213 வகுப்பினர் பிற்பட்ட வகுப்பினராக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே 39 வகுப்பினர் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் என்று வகுக்கப்பட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற முத்தரையர் சமுநாயத்தில் சில பலர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும், சிலர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் ஒன்றாக ஆக்கினால், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பெறும் சில சிறப்புச் சலுகைகளை அவர்கள் பெற முடியாமல் போய்விடும் நிலை ஏற்படும். அவர்கள் அனைவரையும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று வகுக்கலாம் என்றால், அப்படி வகுக்கும் முறைகளில் பிற்பட்டோர் துறைக்கு சில பல சங்கடங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அதனால் தான் அந்தக் கோரிக்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற இடங்களில் உள்ள இந்தச் சமூகத்தினர் மிகவும் மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் தீண்டத்தகாதவர்கள் போன்றே அங்கெல்லாம் நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோரின் சலுகைகளைப் பெற்றுத்தர வேண்டும், அவர்கள் வாழ்க்கை முறையை முன்னுக்குப் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நான் இந்தக் கேள்வியை அரசின் முன் வைத்தேன். அதனால் எப்படியாவது அவர்களையும் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட வகுப்பினரை மட்டும் சுட்டி, அவர்களைப் பின் தங்கியோர் பட்டியலிலோ அல்லது மிகவும் பின் தங்கியோர் பட்டியலிலோ சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தால் மிகவும் எளிதாக இருந்திருக்கும். ஆனால் பல பிரிவுகளைக் கொண்ட முத்தரையர் சமூகத்தினர் அனைவரையும் ஒரே வகுப்பின்கீழ் கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றுவதில்தான் அத்துறைக்கு சங்கடங்கள் அதிகமாக இருக்கிறது என்று சொன்னேன்.

மேலும் மத்திய அரசு சென்சஸ் கணக்கை எடுத்த பிறகுதான் சமூக ஜாதி முறைகளில் எந்தவித பாகுபாடுகளையும் செய்ய வேண்டும் என்று உத்தரவு அனுப்பியிருக்கிறார்கள். அதுவரையில் எந்தவித சமூகத்தினரையும் பிரிக்க வேண்டாம் என்று கேட்டிருப்பதாலும், அப்படி சென்சஸ் கணக்கை எடுத்து முடித்த பிறகு, எவ்வளவு மக்கள் ஒவ்வொரு சமூகத்திலும் இருக்கிறார்கள் அவர்களுடைய கல்வித்தரம் வாழ்க்கைத்தரம் போன்றவற்றை தெள்ளத் தெளிவாக அறிந்த பிறகு வேண்டுமானால் நடவடிக்கை

எடுக்க முயற்சி செய்யலாம். ஆகையினால் அந்த அடிப்படையில் சென்சஸ் ரிப்போர்ட்டுகள் வந்தபிறகு தான் பல பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டியிருக்கிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதியை ஒழிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. ஆகவே மாநிலத்திலுள்ள ஜாதிகளைக் குறைக்க, இப்படி பல்வேறு முனைகளிலிருந்து வரும் வேண்டுகோளுக்கு இணங்கி அவைகளை ஒருங்கிணைத்தால், ஜாதிப்பிரிவுகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாமே, அந்த வகையில் ஒரு குழுவை அமைக்க அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்தின் முன் எல்லோரும் ஒன்று என்பது உண்மைதான் என்றாலும் கூட, நூறு, ஆயிரம் ஆண்டுக்காலமாக பிற்படுத்தப்பட்டு வாழ்க்கையில் பின் தங்கிய நிலையில் உள்ளோர் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த, இப்படி பல பிரிவுகள் இருந்தால், அதனைக் குறிப்பிட்டு அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளை கொடுக்க முடியும் என்ற அடிப்படையில்தான் அரசாங்கம் இப்படி இயங்கி வருகிறது. நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்ற நிலை, எண்ணங்கள் வளர வளர, வாழ்க்கைத்தரம் உயர உயர, மக்களிடையே கூட தானாக ஏற்படக் கூடும். அது வரவேண்டும் என்றுதான் நாம் அனைவரும் விரும்புகிறோம்.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் பட்டுக் கொள்முதல் நிலையம்

*வினா எண் 25—திரு. க. ரங்கசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தாலூகாவில் உற்பத்தி செய்யப்படுகிற பட்டை அரசே கொள்முதல் நிலையத்தை ஏற்படுத்தி வாங்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.